## சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
## வார பாடசாலை

Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa

**பாடம்:- வணிகக்கல்வி**

**வாரம் 03**

**தயாரிப்பு:- S. A. S. டிலக்சனி (BBA)**
**இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்**

**தரம்:13**

**தேர்ச்சி 16:-** வணிகத்தின் வெற்றிக்கு மனிதவளத்தை விளைதிறன் , வினைத்திறனாக பயன்படுத்துகின்ற முறையினை தேடி அறிவார்.

**தேர்ச்சி மட்டம்16.7 :** வணிகத்தின் வெற்றிக்கு மனிதவளத்தை பயன் உறுதியாக, வினைத்திறனாக பயன்படுத்துகின்ற முறை பற்றி தேடி அறிவர்.

(01). ஊழியர் தனது வேலைப்பணிகளை எந்த அளவிற்கு சிறப்பாக நிறைவேற்றுகின்றனர் என்பதை கண்டறிந்து, அறிக்கைபடுத்துகின்ற செயன்முறை செயற்திறன் மதிப்பீடு எனப்படும்.

I. செயற்திறன் மதிப்பீட்டின் மூலம் தொழில் வழங்குனருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் யாவை?
II. செயற்திறன் மதிப்பீட்டின் மூலம் ஊழியருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் யாவை?

(02). கொடுப்பனவு என்பது நிலையான கொடுப்பனவு, ஊக்ககொடுப்பனவு, மற்றும் ஏனைய மறைமுக நன்மைகளை சேர்ந்ததாகும்.

I. கொடுப்பனவு முகாமைத்துவம் என்றால் என்ன?
II. கொடுப்பனவு முகாமை ஒன்றின் அடிப்படைகள் யாவை?

(03). நிறுவனம் ஒன்று தனது ஊழியர்களுக்கு வழங்குகின்ற கூலி மற்றும் படிகள் என்பன சம்பளம் எனும் பெயரில் அழைக்கப்படும்.

I. ஊக்கக் கொடுப்பனவு என்றால் என்ன?
II. பிற நன்மைகள் என்பதால் கூறப்படுவது யாது?
III. கொடுப்பனவு முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் யாது?

(04). பயிற்சி, அபிவிருத்தி எனும் செயற்பாடுகள் நிறுவன செயற்திறனை அதிகரிக்க உதவுகின்றன.

I. பயிற்சி, அபிவிருத்தி என்பவைகளுக்கு இடையிலான வேறுபாடுகள் யாவை?
II. பயிற்சி, அபிவிருத்தி மூலம் தொழில் வழங்குநருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் யாவை?
III. பயிற்சி, அபிவிருத்தி மூலம் ஊழியருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் யாவை?
IV. ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கவும், அபிவிருத்திக்கும் பயன்படுத்தும் பல்வேறு முறைகள் யாவை?

(05. ஊழியரது வேலை நிலையில் ஏற்படுத்தப்படுகின்ற மாற்றங்களை ஊழியர் அசைவு எனலாம்.

I. ஊழியர் அசைவினை ஏற்படுத்தக்கூடிய முறைகள் யாவை?
II. பதவி உயர்வு என்றால் என்ன?
III. இடமாற்றம் என்றால் என்ன?
IV. இடைநிறுத்தம் என்றால் என்ன?